//மிக மிக அவசரம்// தனி கவனம்//

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்
ந.க.எண்.1225/ஆ5/2024 , நாள்.15.04.2025

.....

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – 2024–2025ம் கல்வியாண்டில் அரசு/ அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் போதைப்பொருட்கள் தீமைகள் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டமை – நிகழ்ச்சியின் விவரத்தினை அறிக்கையாகவும் மற்றும் புகைப்படமாகவும் – ஒப்படைக்க கோருதல் – சார்பு

பார்வை வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கூட்டம் நாள். 15.04.2025

.....

வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அவர்களின் அறிவுரைகளின்படி, பள்ளிகளில் போதைப்பொருட்கள் தீமைகள் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு பல்வேறு போட்டிகள் மற்றும் பேரணிகள் நடைபெற்றன.

எனவே 2024–2025ம் கல்வியாண்டில் அரசு/ அரசு நிதியுதவி பெறும் உயர் / / மேல்நிலைப் பள்ளிகளில் போதை பழக்கத்தால் ஏற்படும் தீமைகள் குறித்தும் போதை பழக்கத்திற்கு அடிமையாவதை தடுப்பது குறித்து காவல்துறை, மருத்துவதுறை மற்றும் பிற அலுவலர்கள் மூலமாக மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்ட விவரத்தினை அறிக்கையாகவும் மற்றும் புகைப்படத்துடன் இவ்லுவலக ஆ5 பிரிவில் 16.04.2025 அன்று மாலை 4.00 மணிக்குள் நேரில் ஒப்படைக்குமாறு அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேற்காண் இப்பொருள் சார்பான அறிக்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தொகுத்து அனுப்ப வேண்டியுள்ளதால் இதன் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு தனி கவனம் செலுத்தி குறித்த நேரத்தில் விவரத்தினை ஒப்படைக்குமாறும் தவறும் பட்சத்தில் சம்மந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியரே பொறுப்பாவார் என தெரிவிக்கப்படுகிறது.

ஒ.இ 15.04.25 முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்,
அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர், (இடைநிலை) வேலூர் மாவட்டம்.